DINASUDAR 30 JAN 09

சத்குரு குருவாசுதேவ் பேசுகிறார்

மஹாசிவராத்திரி திருநாள்

மஹாசிவராத்திரி திருநாள், எத்தனையோ வாய்ப்புகளின் வாசலாகத் திகழ்கிறது. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்கு முந்தைய நாள் சிவராத்திரி. மாசி மாதத்தில் வரும் மஹாசிவராத்திரிதான் அந்த ஆண்டிலேயே மிகவும் இருண்ட இரவு. மஹாசிவராத்திரி கொண்டாட்டம் என்பது இருளைக் கொண்டாடுவதன் அடையாளம். தர்க்க ரீதியாக சிந்திக்கும் மனது இருளை விரும்பாது. ஒளியையே விரும்பும். இருளை ஏன் கொண்டாடுகிறோம்? அதுவும் சிவனின் பெயரால் ஏன் கொண்டாடுகிறோம்? இந்தக் கேள்விகள் எழுவது இயற்கை.

"ஷிவா' என்ற சொல்லுக்குப் பொருள் "எது இல்லையோ அது' என்பதுதான். இந்தப் பிரபஞ்சத்தின் எல்லாப் பக்கமும் பார்த்தால் படைப்பு பலவிதங்களில் நடைபெற்றிருப்பதை நீங்கள் காண்பீர்கள். பிரபஞ்சத்திலேயே மிகப்பெரிய இருப்பு எதுவென்று பார்த்தால், அது எங்கும் காணப்படும் பிரம்மாண்டமான வெற்றிடம்தான். மொத்தப் பிரபஞ்சத்திலும் பெரிதாகத் தெரிவது இந்த வெற்றிடம் தான். இந்த வெறுமையிலிருந்தே எல்லாம் தோன்றுகின்றன. இந்த வெறுமையில்தான் எல்லாம் ஒடுங்குகின்றன. இதை நவீன விஞ்ஞானமும் இன்று ஒப்புக் கொள்கிறது. இந்த பிரம்மாண்டமான வெற்றிடத்தைத்தான் "ஷிவா' என்று சொல்கிறோம்.

தொடரும்....